# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | இயேசு, மரியா, யோசேப்பு திருக்குடும்ப பெருவிழா | 28 டிசம்பர் 2025

**எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்**

**மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்:**

திருஅவை (இரக்கமுள்ளது)

சார்பு உணர்வை வளர்க்கவும், நற்செய்தியை அறிவிக்க அதிகாரம் அளிக்கவும் அழைப்பு



# குடும்பங்களில் மாண்பும் மரியாதையும்

இன்று திருக்குடும்பப் பெருவிழாவைக் கொண்டாடுகிறோம். அங்கு இயேசு, மரியா, புனித யோசேப்பின் குடும்பம், குடும்பங்களில் மிகவும் புனித குடும்பமாகவும் மதிக்கப்படுகிறார்கள். எனவே இது நமக்கு ஒரு முன்மாதிரி. சீராக்கின் ஞானநூலின் வாசகங்கள் அடித்தளத்தை அமைக்கிறது. இது குடும்ப வாழ்க்கைக்கு துல்லியமான மற்றும் நடைமுறை வழிகாட்டுதல்களை வழங்குகிறது. பெற்றோரை வெறும் உணர்வுகளால் அல்ல; மாறாக உறுதியான செயல், பொறுமை மற்றும் அக்கறையால் குறிப்பாக முதுமையில் மதிக்கவேண்டும். இந்த மரியாதை, நீதியான ஆன்மீக வாழ்க்கை மற்றும் குடும்பத்தின் பக்தியின் வெளிப்பாடாக கருதப்படுகிறது. சீராக்கின் ஞானநூலில் நாம் ஒருவருக்கொருவர் ஆதரவின் ஆதாரமாக இருக்கவேண்டும் என்பதையும், வீடு என்பது கடமை, மற்றும் பக்தியின் மூலம் உறவுகள் பலப்படுத்தப்படும் இடம் என்பதையும் நாம் கற்றுக்கொள்கிறோம்.

திருக்குடும்பம் குறிப்பிடத்தக்க அனைத்து நற்பண்புகளையும் எடுத்துக்காட்டுகிறது. எகிப்துக்கு ஓடிப்போவதும், குடும்பம் அகதியாக மாறுவதும், நிச்சயமற்ற தன்மைகளை எதிர்கொள்வது பற்றியும் நற்செய்தி கூறுகிறது. கடவுள் மற்றும் அவரது தெய்வீகத்தின் மீது மரியாவும், யோசேப்பும் கொண்டிருந்த அசைக்கமுடியாத நம்பிக்கை அவர்களின் அனைத்துத் தடைகளையும் கடந்து இறுதியில் நாசரேத்தூரில் குடியேற உதவுகிறது.

இன்றைய காலக்கட்டத்தில் எப்போதையும் விட முழுமையாக செயல்படமுடியாத குடும்பங்களின் யாதார்த்த நிலையை நாம் எதிர்கொள்கிறோம். திருக்குடும்பத்தில் வேரூன்றியிருக்கவேண்டிய நற்பண்புகளின் முறிவிலிருந்து இது தோன்றுகிறது. மேலும் இது பரந்த அளவில் உள்ளது. உடைந்துபோன நம்பிக்கை, துரோகம் நெருக்கடிக்கு வழிவகுக்கும் பயனற்ற தொடர்பு, நிதி நெருக்கடியால் ஏற்படும் அழுத்தம், போதை, மன சவால்கள் என்று பட்டியல் நீண்டுகொண்டே செல்கிறது. திருக்குடும்பத்தைப் பின்பற்றுவது மிகவும் சவாலானது என்று நாம் நினைக்காதபடி, புனித பவுல் கொலோசையருக்கு எழுதிய கடிதத்தில் மிகவும் எளிமையான சில அறிவுரைகளை வழங்குகிறார்.

முதலில் பரிவு, இரக்கம், நல்லெண்ணம், மனத்தாழ்மை, கனிவு, பொறுமை ஆகியவற்றை அணிந்துகொண்டு ஒருவருக்கொருவர் பொறுத்துக்கொண்டு, மன்னிக்கவேண்டும் என்று அவர் கூறுகிறார். இந்த நற்பண்புகள் ஒன்றுக்கொன்று ஒருங்கிணைந்தவை. அவை எதுவுமே தனித்து இல்லை. ஒரு நல்லொழுக்கம் மற்றொன்றின்மீது கட்டமைக்கப்படுகிறது. தார்மீக வாழ்க்கை என்பது தனிமைப்படுத்திகொண்டு செய்யும் செயல்களின் தொடர்ச்சி அல்ல. ஆனால் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட நல்ல பழக்கவழக்கங்களின் வலைப்பின்னல் என்று தோமஸ் அக்வினாஸ் நமக்குக் கற்பிக்கிறார். ஒரு இடத்தின் பலன் மற்றொரு பகுதியில் வளர்ச்சியைத் தூண்டுகிறது.

நாம் நல்ல நம்பிக்கையுடன் ஒருவருக்கொருவர் கற்பித்து அறிவுறுத்தும்போது, அன்பை அணிந்துகொண்டு, அனைத்தையும் பிணைத்து நிறைவு செய்யும் கிறிஸ்துவின் வார்த்தை வளமாக நம்மில் வாழட்டும். இதனால், கிறிஸ்துவின் அமைதி நம் உள்ளங்களை நெறிப்படுத்துவதாக. குடும்பங்களாக ஒன்றித்துப் பயணம் செய்வது வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் ஒரு செயல்முறையாகும். ஆனால் நாம் உண்மையுள்ளவர்களாகவும், மரியாதையுடனும் இருக்கும்வரை, வாழ்க்கைத் துணைவர்களும், குழந்தைகள் பெற்றோரையும் மதிக்கும் வரை வாழ்க்கையின் சவால்கள் எதுவந்தாலும், அவற்றை எதிர்கொள்ளும் வலிமை நமக்கு இருக்கும். ஆண்டவருக்கு அஞ்சி அவர் வழிகளில் நடக்கும் குடும்பங்கள் பேறுபெற்றவை.

> இரக்கமுடையோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்.
>
> - மத்தேயு 5:7

**இன்றைய இறைவார்த்தை:**

சீராக்கின் ஞானம் 3: 2-6, 12-14

திருப்பாடல் 128: 1-5

கொலோசையர் 3: 12-21

மத்தேயு 2: 13-15, 19-23

INTERNAL CIRCULATION ONLY
BUL 52/2025

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org